ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1818/9 - 2013 ජූලි මස 09 වැනි අඟහරුවාදා - 2013.07.09
1818/9 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

அனுமதிபெறாது மூன்று மாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

திரு. ஜேம்ஸ் சுதாகரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. சந்தாம்பிள்ளை பத்திநாதன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது மாந்தை மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கஹந்தவ ஆரச்சிகே சுமித் சந்தன ஆகிய நான், திரு. சந்தாம்பிள்ளை பத்திநாதன் என்பவர் மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. ஏ. சுமித் சந்தன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மன்னார்,
2013, யூன் 28.

7 - 718